# பெருங்கதையில் அரசநெறிமுறைகள்

**அ.ராஜமரகதம்**
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம்
திருநெல்வேலி

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

கொங்குவேளிரால் படைக்கப்பட்ட பெருங்கதையில் உதயணனை மையமாகக்கொண்டு உருவாக்கப்பட்ட சமணக் காப்பியமாகும். இக்காப்பியத்தில் உதயணன், பிரச்சோதனன், தருசகன், ஆருணியரசன், நரவாணன் உள்ளிட்ட அரசர்களின் கடமைகள், அரசாட்சி நெறிமுறைகள், அமைச்சர்கள் அரசர்களுக்காகச் செயலாற்றியவிதம் குறித்த செய்திகளைப் புலப்படுத்தியுள்ளார். கி.பி. 7ஆம் நூற்றாண்டில் எழுந்த இக்காப்பிய காலக்கட்டத்தில் இடம் பெற்றிருந்த அரச நெறிமுறைகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

### அரச கடமைகள்

பெருங்கதையில் உதயணனின் வத்தவ நாடும், பிரச்சோதனின் உஞ்சை நாடும், தருசகனின் மகத நாடும் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. நாடு குறித்து வள்ளுவர்.

**“உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேராது இயல்வது நாடு”**[1]
**“கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா**
**நாடு என்ப நாட்டின் தலை”**[2]

என்றவாறு வரையறை செய்துள்ளார். நாட்டை ஆளும் மன்னன் உயிராகவும் மக்கள் உடம்பாகவும் இருந்தைப் புறநானூறு

**“மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்”**[3]

என்றவாறு குறிப்பிட்டுள்ளது.

### நாடுகாத்தல்

மன்னர்கள் தங்களின் நாட்டு மக்களின் நலனையும் நாட்டின் நலனையும் பேணுவதில் மிகுந்த அக்கறைகொண்டிருந்தனர். பெருங்கதையில் பேரரசனான பிரச்சோதனன் தன் நாட்டின் பட்டத்து யானையான நளகிரி மதம்கொண்டு மாளிகைகளையும், மக்கள் வாழும் உய்யானங்களையும் அழித்ததுடன் வீரர்களையும் கொன்றுகுவித்தது கண்டு மன வருத்தம் அடைகிறான். தன் நாட்டினையும் மக்களையும் காக்க வேண்டுமாயின் தன்னால் சிறையிடப்பட்ட தனக்கு அடங்கிய சிற்றரசனான உதயணன்தான் வரவேண்டும் என்பதை அமைச்சன் மூலம் அறிந்து உதயணனிடம் அச்செய்தியை அமைச்சர் மூலம் தெரிவித்தான். உதயணனும் தன் யாழின் துணைகொண்டு நளகிரியின் மதத்தினை அடக்கினான். இந்நிகழ்வின் மூலம் நாட்டினையும் நாட்டு மக்களையும் காக்கவேண்டிய நிலை வரும் போது பேரரசன் தன்னிலையிலிருந்து தாழ்ந்து போகவும் இசைகின்றான் என்பதும் நாடு மக்கள்மீது அவன் கொண்ட பற்றும் வெளிப்படுகின்றன.

மகத மன்னன் தருசகனும் தன் நாட்டின்மீது பிற மன்னர்கள் போர்தொடுக்கும்போது நாட்டினையும் நாட்டு மக்களையும் காக்கவேண்டும்

என்பதைக் கருத்தில்கொண்டு உதயணன் மற்றும் அச்சுவப்பெருமகன் என்னும் இரு மன்னர்கள் தாமாகவே உதவ முன்வரும்போது துணை வலிமை கருதி தன்படைகளை அவர்கள் ஏற்று நடத்திட இசைகின்றான். அப்போரில் உதயணன் வெற்றியும் அடைகின்றான். இச்செயல் துணைவலிமையின் சிறப்பை வலியுறுத்தும் வள்ளுவரின்

**"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்"[4]**

என்ற குறளோடு ஒப்புநோக்கத்தக்கது.

இதனைப்போன்று உதயணன் முன்னாளில் தன்னை விட்டுப்பிரிந்த தெய்வயானையைத் தேடித்திரிந்த காலத்தில் பிரச்சோதனனின் எந்திரயானையால் சிறைபிடிக்கப்பட்டான். அந்நிலையில் அவனது வத்தவ நாட்டினை ஆருணியரசன் கைப்பற்றினான். உதயணனின் வத்தவ நாட்டினை ஆருணி அரசனிடமிருந்து மீட்கவும் உதயணனுக்கு மீண்டும் அரசாட்சி கிடைக்கவும் தருசகன் மூவகைப் படைகளை அனுப்பி உதவி செய்ய முன்வரும் நிலையில் உதயணன் அதனை ஏற்கிறான். இச்செயல்பாடுகளின்வழி நாட்டினைக் காப்பதற்கு அரசர்கள் மேற்கொண்ட செயல்முறைகளையும் நாட்டு மக்களின்மீது அவர்கள் கொண்டிருந்த அன்பினையும் புரிந்துகொள்ள முடிகிறது.

### பேரழிவுச் சீராக்க மேலாண்மை

ஆருணி அரசனிடமிருந்து தன் நாட்டினை மீட்ட உதயணன், தன் நாட்டு மக்களுக்குச் சிறப்பு செய்யும்வகையில் ஆருணி அரசனின் ஆட்சியில் இருந்த பல்வேறு இடர்களைக் களைந்தான். இதனை 'நாடு பாயிற்று' என்னும் பகுதியில் வேளிர் விளக்குகிறார். ஆருணி அரசனால் பராமரிக்கப்படாமையால் 'சிதைந்தும் புதைந்தும் இருந்த ஆலயங்களையும், அருகன் கோயில்களையும், அந்தணக் குடியிருப்புகளையும், தோட்டங்களையும், குளங்களையும், வாணிகம் செய்யும் கடைத் தெருக்களையும், சந்திகளையும், தேவகோட்டங்களையும் புதுப்பித்திடுக' எனத் தம் பணியாளர்களுக்கு ஆணையிட்டான்"[5]. மேலும் பகை மன்னனாலே பொருள்களை இழந்த குடிமக்கள் மீண்டும் அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறும் முரசு அறைவித்தான். உதயணனின் இச்செய்கைகள் மூலம் அவனுடைய பேரழிவுச் சீராக்க மேலாண்மைப் பண்பு வெளிப்படுகிறது.

### அரசஉதவிகள்

ஆருணி அரசனுடன் போரிட்டுத் தன் நாட்டினை மீட்க உதயணன் முற்பட்டபோது தனக்கு உதவி செய்த தருசகனின் அமைச்சர்கள், படைவீரர்களுக்கும், தான் உஞ்சை நாட்டில் சிறைபட்டிருந்த போதும், மகத நாட்டில் மறைந்து வாழும்போதும் தனக்குப் பலவாறு உதவிகள் செய்தவர்களுக்கும் உதயணன் தன்நாட்டினை மீட்டவுடன் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகப் பாராட்டுகளையும் பரிசுகளையும் நல்கியமை குறித்து 'கொற்றம் கொண்டது' என்னும் பகுதியில் வேளிர் விளக்குகிறார். தருசகனின் அமைச்சர்களான வருடகாரன் மற்றும் தருமதத்தனுக்கும் பட்டங்களையும் பரிசுகளையும் நல்கினான். அதே போரில் இறந்துபோன தருசகனின் அமைச்சனான சத்தியகாயனின் மக்களுக்குப் போர் வீரர்களுக்குத் தலைமைதாங்கும் பதவியை வழங்கினான். இவற்றின் மூலம் தனக்கு உரிய நேரத்தில் உதவியோருக்கு உதயணன் மறுஉதவி செய்தமையையும் அவனது நன்றி மறவாத் தன்மையையும் உணரமுடிகிறது.

### அன்றாடக் கடமைகள்

பெருங்கதை காலக்கட்டத்தில் அரசர்கள் தங்களின் அன்றாடக் கடமைகளைக் மேற்கொண்டதைப் அறியமுடிகின்றது. பிரச்சோதன அரசன் "காலையில் கண் விழித்ததும் தனக்கு இரவில் காவல்செய்த வீரர்களின் பெயர்களை வாசிக்கக் கேட்டான், மூலிகை மருந்து கலந்த அஞ்சனத்தைக் கண்களுக்கு இட்டான், கபிலைப் பசுவைத் தரிசனம் செய்தான், துறவிகளை வணங்கினான், மலர்கள் கலக்கப்பட்ட மந்திர நீரினை அருந்தினான், சிங்காதனத்தில் அமர்ந்து விரிநூல் கூறும் தானதருமங்களைக் கேட்டறிந்தான்"[6] என்பன வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**விருந்தோம்பல்**

அரசர்கள் தங்களின் அரசவிருந்தினர்களை சிறப்பாக உபசரித்துள்ள முறைகுறித்தும் வேளிர் பிரச்சோதனன் வாயிலாகக் குறிப்பிட்டுள்ளார். உதயணன் நளகிரியின் மதத்தினை அடக்கித் நாடு, நகரினைக் காப்பாற்றியதன் காரணமாக அவனை அழைத்து "இ∴து உன்னுடையநகர் நாங்கள் அனைவரும் உனக்கு உறவினர்கள், இங்குள்ள பொருள்கள் எல்லாம் உனக்கு உரியனவே" என்று அன்புமொழி பேசினான்.

உதயணன் தன் மாளிகைக்குள் வரும்போது பிரச்சோதனன் விருந்தினரை உபசரிக்கும்முகமாக எதிர்சென்று வரவேற்று பேரரசனான தனக்கு இணையாகத் தன்னுடன் இருக்கையில் அமர்த்தினான். இதனை,

> **"இரட்டைத் தவிசி னிருக்கை காட்டி**
> **இசைக்க வேண்டா விதையுன தில்லெனச்**
> **சிறப்புடைக் கிளவி செவ்விதிற் பயிற்றி"[7]**

என்ற அடிகளில் வேளிர் குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம் பேரரசன் என்றாலும் விருந்தினர்களை முறையாகப் போற்றி உபசரிக்க வேண்டும் என்ற உயர்ந்த பண்பு கொண்டவனாகப் பிரச்சோதனன் உள்ளமை புலப்படுகிறது.

**நீதிவழங்கல்**

அரச நெறிகளில், மக்களுக்கு முறையாக நீதி வழங்குதல் என்பது முக்கியமான செயல்பாடாகும். உதயணனின் முன்பு வணிககுடும்பத்தைச் சார்ந்த வழக்குகொன்று வருகிறது. மூன்று சகோதரர்களைக்கொண்ட ஒரு குடும்பத்தின் மூத்தவன் கடல் வாணிபத்தை மேற்கொண்டபோது விபத்தில் இறந்துவிட்டதாக செய்தி வருகிறது. சகோதரர்கள் இருவரும் அவருக்கு ஈமக்கடன்களைச் செய்தபிறகு இறந்தவனின் சொத்து எவ்வாறு பங்கிடப்பட வேண்டும் என்ற பிரச்சினை தொடர்பாக அவ்வழக்கு அமைந்திருந்தது. இவ்வழக்கை உதயணன் தன் அமைச்சனான உருமண்ணுவாவிடம் அளித்து உரிய நீதி வழங்கிடுமாறு கூறுகிறான். உருமண்ணுவா, இறந்துபோனவனாகக் கருதப்படும் மூத்த வணிகனுக்கு குடும்பம் உள்ளதா எனக் கேட்க, அப்பெண்ணின் உறவினர்கள் அவள் கருவுற்று இருப்பதையும், தன் கணவன் இறக்கவில்லை என்று அவள் நம்புவதையும் தெரிவிக்கின்றனர். இதனைக் கேட்ட அமைச்சன் அப்பெண் 'ஓர் ஆண் மகனைப் பெற்றால் அப்பொருள் அவனுக்கே உரியதாம்? பெண் மகவு பெற்றால் அதனை வளர்த்தல் "கற்பித்தல், அணிகள் செலவு, மணம் புரிவித்தல் முதலிய புறத்தொழில்களைச் செய்துமுடித்து எஞ்சிய பொருட்களை இவ்விருவரும் பாகமுறைப்படி அடைவார்கள் என்று தீர்ப்பளித்தான். அதை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்"[8] இத்தீர்ப்பின் மூலம் அரசர்கள் தன் நாட்டு மக்களுக்கு, முறையான தீர்ப்பு வழங்கியமையை அறியமுடிகிறது.

**அரசியலில் அமைச்சர்களின் பங்கு**

அமைச்சர்கள் அரசர்களோடு இயைந்து நாட்டு முன்னேற்றத்தற்கு எங்ஙனம் பாடுபட்டனர் என்பதைப் பெருங்கதை சிறப்பித்துக் காட்டியுள்ளது. உதயணனுக்கு யூகி சிறு வயது தோழனாகவும் பின்னர் அமைச்சனாகவும் கடனாற்றுகின்றான். உதயணன் பிரச்சோதனால் கபடமாகச் சிறைப்பிடிக்கப்பட்டபோது தான் இறந்துவிட்டதாக ஒரு பொய் செய்தயைப் பரப்பி, அவந்தி நாட்டிற்குச் சென்று பிரச்சோதனனின் பட்டத்து யானைக்கு மதம்பிடிக்கச் செய்தும், உதயணன்மீது காதல் கொண்டிருந்த பிரச்சோதனனின் மகளான வாசவதத்தையை உடன்போக்காக அனுப்பிவைத்தும், தான் இழந்த நாட்டை மீட்க முயற்சிக்காது உதயணன் இருந்த நிலையில் வாசவதத்தையைச் சாங்கியத்தாயின் உதவியுடன் தற்காலிகமாகப் பிரித்து, தன் நாட்டை உதயணன் மீட்கும் முயற்சியில் ஈடுபடச் செய்கிறான். நாட்டை மீட்ட உதயணனிடம் வாசவதத்தையை மீண்டும் யூகி ஒப்படைக்கிறான். மானனீகையை உதயணன் விரும்புவதைக் கண்ட வாசவதத்தை அவளது கூந்தலைக் குறைக்க முற்பட்டபோது யூகி உள்ளிட்ட அமைச்சர்கள் இச்செயல் நிகழாவண்ணம் காலம் தாழ்த்தி, பின்னர் மானனீகை-உதயணன் திருமணம் நிகழ்வதற்கும் காரணமாக அமைகின்றனர். யூகியைப் போலவே உருமண்ணுவா

வயந்தகனும், இடபகன், இசைச்சன் போன்ற அமைச்சர்களும் வத்தவ நாட்டு முன்னேற்றத்திற்குத் தங்களின் பங்களிப்பைச் செலுத்தியுள்ளனர்.

பிரச்சோதனனின் பதினாறாயிரம் அமைச்சர்களுள் சாலங்காயன், பரதகன், சிவேதகன் இந்த மூவர் மட்டுமே முதன்மைப் படுத்தப்பட்டுள்ளனர். இவர்களுள் சாலங்காயனின் செயல்பாடுகளாக திறை செலுத்தாத உதயணனை எந்திர யானை மூலம் சிறைபிடிக்கவும், நளகிரியின் மதத்தினை அடக்கவும் உதயணனே உகந்தவன் என்று அறிவுறுத்தினான். வாசவதத்தையின் உடன்போக்கு குறித்துப் பிரச்சோதனன் வருந்தியபோது 'உன்னைப்போன்ற தகுதியும் குலனும் உடைய ஒருவனையே அவள் விரும்பியுள்ளாள்.'[9] என்று கூறி அவன் மனவருதத்தினைப் போக்கியும் செயலாற்றியமை சாலங்காயனின் அமைச்சுத்திறன் வெளிப்படுகிறது.

உதயணன் தன் நாட்டினை மீட்டு நான்கு மனைவியர்களுடன் அரசாட்சி செய்து நரவாணதத்தன், கோமுகன் ஆகிய குழந்தைகளைப் பெற்று இறுதியில் சமண மதக் கொள்கைப்படி துறவு வாழ்வு மேற்கொண்டதான செய்தி, பெருங்கதையில் இடம் பெற்றுள்ளது.

**தொகுப்புரை**

பெருங்கதையில் இடம்பெற்ற சிறப்பான மூன்று அரசர்கள் பற்றியும் நாடுகாத்தலில் அரசர்கள் மேற்கொண்ட வழிமுறைகள், போருக்குப்பின் உதயணனின் நிகழ்த்தப்பட்ட பேரழிவுச் சீராக்க மேலாண்மை, அரச உதவிகள், போன்றனவும் அரச நெறிமுறைகளான அன்றாடக் கடமைகள் விருந்தோம்பல், நீதிவழங்கல் போன்றனவும் அரசர்களுக்கு அமைச்சர்கள் ஆற்றிய பங்கு குறித்தும் பெருங்கதைக் காப்பியம் வாயிலாக அறியமுடிகின்றது.

**சான்றெண்விளக்கம்**

1. திருக்குறள், 734.
2. மேலது, 736.
3. புறநானூறு, பா.186.
4. திருக்குறள், 471.
5. பெருங்கதை, (4:2:9-19)
6. மேலது, (1:34:15-25)
7. மேலது, (1:34:42-44)
8. மேலது, (5:1:44-55)
9. மேலது, (1:47:137)

**துணைநூற்பட்டியல்**

1. சாமிநாதையர். உ.வே., பெருங்கதை மூலமும் குறிப்பும், உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், பெசன்ட் நகர், 1996.
2. செந்தமிழ்ச் செழியன், திருக்குறள் (தெளிவுரை), சக்தி பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை, 2016.
3. சோமசுந்தரனார். பொ.வே, பெருங்கதை மூலமும், விளக்கவுரையும் கழகப்பதிப்பு, சென்னை, 1953.
4. துரைசாமிபிள்ளை. சு.ஔவை., புறநானூறு, கழகவெளியீடு, சென்னை, 1964.